UTL MEDIA

SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா

## சுருக்கம்

கூட்டுறவு – கூட்டுறவு நிறுவனங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டு 31.03.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருக்கும் மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களை தள்ளுபடி செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை

அரசாணை (நிலை) எண். 114

நாள் : 03.12.2021
பிலவ வருடம், கார்த்திகை – 17
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டது :

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் ந.க. எண்.30251/2021/ மவகொ1, நாள் 16.08.2021 மற்றும் 07.10.2021.

----

**ஆணை:**

13.08.2021 அன்று தாக்கல் செய்த திருத்த வரவு செலவு திட்டம் 2021-2022-இல், "கூட்டுறவு சங்கங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 2,756 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். கடன் வழங்குவதற்கு ஏதுவாக இச்சங்கங்களுக்கு பல்வேறு கட்டங்களில் நிதிநிலை வழங்குவதற்கான நடைமுறையை அரசு வகுக்கும். இதற்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்படி 2021-2022-ம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு திட்ட உரையில் தெரிவிக்கப்பட்டபடி, பார்வையில் படிக்கப்பட்ட கடிதங்களில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள், தமிழ்நாட்டில், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் பெரும்பலநோக்கு கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது என்றும், கூட்டுறவு நிறுவனங்கள் பொது மக்களிடமிருந்து திரட்டும் குறுகிய கால வைப்புத் தொகைகளிலிருந்தும், சங்கங்களின் சொந்த நிதியிலிருந்தும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD), டாப்செட்கோ, டாம்கோ நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றும் 11.50% வரையிலான வட்டி விகிதத்தில் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குகின்றன என்றும், 31.03.2021 அன்றுள்ளபடி, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூ.2755.99 கோடியாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

UTL MEDIA

3. மேற்படி நிலுவைத் தொகை ரூ.2,755.99 கோடியில், அசல் தொகை (Prinicipal Amount) மட்டுமே ரூ.2,459.57 கோடி உள்ளது என்றும், இந்த அசல் தொகையில், கூட்டுறவு நிறுவனங்களின் சொந்த நிதியிலிருந்து, ரூ.1,092.47 கோடியும், உயர் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து (தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, நபார்டு, டாம்கோ, டாப்செட்கோ போன்றவை) ரூ.1,367.10 கோடி கடன் பெற்று சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன் நிலுவைத் தொகை ரூ.2755.99 கோடியை தள்ளுபடி செய்யுமாறும், அவ்வாறு தள்ளுபடி செய்யும் தொகையினை ஒரே தவணையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்குமாறும், 01.04.2021 முதல் அரசாணை வெளியிடப்படும் நாள் வரையிலான மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக் கடன்களுக்கான வட்டி, அபராத வட்டி, இதர செலவினங்கள் உள்ளிட்ட நிலுவைத் தொகை முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டு, உரிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கிடுமாறும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களில் 31.03.2021 அன்றைய தேதியில் உள்ள நிலுவைத் தொகையில், அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் தவிர்த்து, அசல் தொகையான ரூ.2,459.57 கோடியும் மற்றும் வட்டி தொகையான ரூ.215.07 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.2,674.64 கோடியை தள்ளுபடி செய்ய அனுமதி வழங்குகிறது. இதில், முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் ரூ.600 கோடி விடுவிக்கவும், மீதமுள்ள தொகை 7% வட்டியுடன் நான்கு ஆண்டுகளில் இணைப்பில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விடுவிக்கவும் அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 103 மகளிர் நலன் மாநிலச் செலவினங்கள் BU – கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து மகளிர் சுய உதவி குழுக்களால் பெறப்பட்ட கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்வதற்கான உதவித் தொகை – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

(IFHRMS த.தொ.கு.: 2235 02 103 BU 30903)

6. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அத் துறையின் அ.சா.கு. எண்.107, DS(B)/2021, நாள் 03.12.2021.-இன்படி வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை- 600 010.(இ)
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை-600 001.( இ)
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னை-600 004.(இ)

UTL MEDIA

மாநில கணக்காயர், சென்னை - 600 018. (இ) (2 நகல்கள்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை - 600 035. (இ) (2 நகல்கள்)
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.(இ)
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.(இ)
முதன்மை செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை - 600 009.(இ)
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை- 9. (இ)
நிதி (கூ.உ.ம.நு.பா)த் துறை, சென்னை - 600 009. (இ)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
3/12/21
3.12.2021

UTL MEDIA

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.114, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிசி1)த் துறை, நாள் 03.12.2021.**

(i) கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள் மட்டும் தள்ளுபடி செய்யப்படும்.

(ii) 31.03.2021 அன்று நிலுவையில் இருந்த மகளிர் சுய உதவி குழு கடன்களுக்கான அசல், வட்டி மட்டும் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

(iii) 31.03.2021 அன்று மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடன் கணக்கில் நிலுவையில் இருந்து, தள்ளுபடிக்கான அரசாணை வெளியிடப்படும் நாள்வரை அக்குழுவால் கடன்தொகை பகுதியாக செலுத்தப்பட்டு இருப்பின் அத்தொகை போக எஞ்சிய தொகை மட்டும் தள்ளுபடி மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருப்பின் அரசு மானியம் தவிர்த்து மீதமுள்ள தொகை தள்ளுபடி செய்யப்படும்.

(iv) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட குடும்ப அட்டை மற்றும் ஆதார் விவரங்களை சரியாக அளிப்பவர்கள் மட்டுமே தள்ளுபடி செய்ய தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

(v) இல்லாத மற்றும் போலி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன், ஆதார் எண், பான், KYC விவரங்கள், குடும்ப அட்டை தரவுகள் அளிக்காத மற்றும் தரவுகள் சரியாக இல்லாத கடன்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.

(vi) 31.03.2021-அன்று நிலுவையில் உள்ள அசல் மற்றும் வட்டி மட்டுமே அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகையாகும்.

(vii) 31.03.2021 அன்று கடன் நிலுவையாக இருந்து, அரசாணை வெளியிடப்படும் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தொகை முழுவதும் திரும்பச் செலுத்தப்பட்ட கடன்கள். அவை தகுதிபெறாத இனங்களாக கருதப்படும்.

(viii) 01.04.2021 முதல் தகுதி படைத்த கடன்களுக்கு வட்டி வசூலிக்க கூடாது.

(ix) கடன் தள்ளுபடி செய்யப்பட்ட சான்றிதழ் மற்றும் நிலுவையின்மை சான்று, கடன் தள்ளுபடி செய்யப்பட்டவுடன் வழங்கப்பட வேண்டும்.

(x) கடன் தள்ளுபடி செய்யப்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பெயர்கள் வெளியிடப்பட வேண்டும்.

(xi) ஏற்கனவே, பங்குத் தொகை செலுத்தியிருந்து கடன் தள்ளுபடி செய்யப்படும்பொழுது எக்காரணத்தை முன்னிட்டும் பங்குத் தொகை திரும்ப வழங்கக் கூடாது அல்லது சரிகட்டல் செய்யக் கூடாது.

UTL MEDIA

(xii) அரசாணை பிறப்பிக்கப்படும் நாள் வரை நிலுவையில் உள்ள தொகையை பகுதியாக செலுத்தியது நீங்கலாகவும், இந்தப்பட்டியலில் கண்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யாத நேர்வுகளை நீக்கியும் தள்ளுபடி செய்யப்படும்.

(xiii) 01.04.2021 மற்றும் அதன் பிறகு வழங்கப்பட்ட சுய உதவி குழுக்களுக்கான கடன்கள் தகுதிபெறாத இனங்களாக கருதப்படும்.

(xiv) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட குடும்ப அட்டை இல்லாமல் பிற மாநிலங்களால் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் இருப்பின் அவர்களுக்கு தள்ளுபடி வழங்கப்படமாட்டாது.

(xv) ஆதார் அட்டையில் தமிழ்நாடு முகவரி இல்லாமல் பிற மாநிலங்களின் முகவரி கொண்ட ஆதார் அட்டைகள் இருப்பின் அவர்களுக்கு தள்ளுபடி கிடையாது.

(xvi) அயல் மாவட்ட கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநருக்கு வழங்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் அயல் மாவட்ட கூட்டுறவு தணிக்கை துறையினரால் பயனாளிகளின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு கையொப்பமிடப்பட்டு ஒப்புதலளிக்கப்பட வேண்டும். இவ்வாறு, சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி பெறுவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகள் பட்டியல் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தில் / வங்கியில் பொதுமக்களுக்கு தெளிவாகத் தெரியும் வகையில் விளம்பரப் பலகையில் பொருத்தி வெளியிட வேண்டும். இவ்விவரங்களை அந்தந்த மத்திய கூட்டுறவு வங்கியின் இணைய தளத்திலும், மாவட்ட ஆட்சியரின் இணைய தளத்திலும் வெளியிட தொடர்புடைய மண்டல இணைப்பதிவாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(xvii) கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்களின் ஒப்புதல் பெறப்பட்ட இறுதி பட்டியல் தொடர்புடைய சரக துணைப்பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும். சரக துணைப்பதிவாளர்கள் இறுதி பயனாளிகளின் பட்டியலை தமது மேலொப்பத்துடன் மண்டல இணைப்பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(xviii) இவ்வாறு இறுதி செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பயனாளிகளின் பட்டியலுக்கு நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெறப்படுவதை சரகத்துணைப்பதிவாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(xix) பயனாளிகளின் பட்டியல் தணிக்கைக்குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே கடன் தள்ளுபடி வழங்கப்பட வேண்டும்.

(xx) ஏற்கனவே கூட்டுறவு சங்கங்களிலிருந்து பயிர்க்கடன் மற்றும் நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் இத்திட்டத்திற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

(xxi) தனியர் பல்வேறு சுயஉதவிக் குழுக்களில் இருந்தால், அவர் எந்த குழுவில் பெற்றுள்ள கடனை தள்ளுபடி செய்ய விழைகின்றாரோ அந்த கடனுக்கு மட்டும் தள்ளுபடி செய்யலாம். இதர குழுக்களுக்கான தனியருக்கான விகிதத்தை தனியரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

UTL MEDIA

மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கை வாழ் தமிழர்கள், இத்திட்டத்தின் கீழ், மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு தள்ளுபடி பெற தகுதியானவர்கள் ஆவர்.

(xxii) தள்ளுபடி கோரும் உறுப்பினர்களில் எவரேனும் எந்தப் பொருளும் வேண்டாத குடும்ப அட்டைதாரர்கள் (NPHH) இருப்பின், அவர்களது கடன்களுக்கு தள்ளுபடி இல்லை. மற்ற உறுப்பினர்களது கடன் தள்ளுபடி செய்யப்படும்.

(xxiii) அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர், அரசுத்துறை நிறுவனங்களில் தற்காலிக அல்லது காலமுறை அடிப்படையில் அல்லது தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றுபவர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், அவர்தம் குடும்பத்தினர்கள், கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒரு குழுவில் பெற்றிருப்பின், அவர்களுக்கான விகிதாச்சாரத்தினை தள்ளுபடி செய்யப்படமாட்டாது. இவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு தள்ளுபடி வழங்கலாம்.

(xxiv) சுய விருப்பத்தின் பேரில் தள்ளுபடி பெறவிருப்பம் இல்லாதவர்கள் இருப்பின் அவர்களின் கடன் தள்ளுபடி செய்யக் கூடாது.

முகமது நசிமுத்தின்
கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

3/12/21

3.12.2021